முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1226

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.02.2023, திங்கட்கிழமை

1. ஞான சித்தே அரங்கா வாழ்க
ஞான பலம்கொண்ட தேசிகா வாழ்க
தானதரும சக்திகூட்டி தரணி எங்கும்
தக்கவழிகாட்டி தருமம் பெருக்கும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 23 ம் நாள் 06.02.2023, திங்கட்கிழமை)
ஊழ்வெல்லும் மகா சக்தி கலியில் நீயே
உலகை மாற்றும் மாதவசியும் இந்த கலியில் நீயப்பா
3. அப்பனே அரங்கன் உன் திருவடி பற்றி
அகிலத்தார் தொடர்ந்து வந்தால்
ஒப்புகொண்டு உலகமாற்றம் உடனே காணும்
உலகோர்க்கு ஞானபலம் இனிதே ஓங்கும்
4. ஓங்கவே அரங்கா முருகா எனும் ஜெபதபத்தோடு
உலகமெங்கும் செய்யும் தர்மமே
ஓங்காரம்பட உலகமெங்கும் வலம் வந்து
உலகையே தர்மலோகமாக மாற்றும்
5. மாற்றுகின்ற இந்த சக்தி பெருகபெருக
மக்களிடை மனத்தெளிவு ஆற்றல் கூடி
ஆற்றல்பட ஞானவான்களை தேர்வுசெய்து
அகிலத்தில் ஞானத் தலைமைகளை உருவாக்கி அரங்கன் நீதேடும் ஞானிகள் படைபெருகி
6. பெருகி இனிதே உலகில் ஞானவான்கள் ஆட்சிக்காலமாக
பிசகின்றி அரங்கன் உன் ஆசியால் அருளால் நடந்தேறும்
நடந்தேற ஞானவான்களை படைக்க ஞானவான்கள் மேலும் ஞானிகளாக
ஆற்றல்பெற அரங்கன் உன்வழிக்கு உலகோர் உடன் வரவேண்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–